
1523

Regd. No M. 2475. MAY 1931. Vlo. VI—No. 5




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதருஸ்.

பொருளடக்கம்.

22 JUN 1931


| செ. | | பக்கம். |
|---|---|---|
| 1. | கிராம முன்னேற்ற விஷயம் | 59 |
| 2. | கிராம ஜனங்கள் கடன்படுதல் | 65 |
| 3. | சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகள் | 66 |
| 4. | சென்னை சட்டசபையில் நிலவரி சம்பந்தமாகவும் காடுகளின் சம்பந்தமாகவும் விவாதங்கள் | 69 |
| 5. | தஞ்சாவூர் விழ்ச்சி | 73 |
| 6. | வர்த்தமான குறிப்பு | 76 |


JL
Y31m2,N26
N31.6.5
199403

ரூ. 3.
6.

எடிடர் & மானேஜர்:
ஏ. சுவாமினாதய்யர், பி. ஏ.

## செவிட்டுத்தன்மை

மண்டை இடி, தலைவலி முதலியவை சுவஸ்தமாகும்.

### நூதனமான மேநாட்டு மருந்து

# லார்மலீன்

(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

லார்மலீன் என்னும் இம்மருந்தை வீடுகளில் வேறு அதிகப்பணச்சிலவு இல்லாமல் மிகவும் சுலபமாக உபயோகிக்கக்கூடியது. இக்களிம்பு, நோய் உள்ள இடங்களில் தடவிய மாத்திரத்தில் வலியைப் போக்கும் தன்மையுள்ளதாயிருக்கிறது.

இதற்கு அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களும் கிடைத்திருக்கின்றன.

நம்பிக்கையுள்ள நற்சாக்ஷிப் பத்திரம்.

கிரைடன் நகரம், ஒயிட் ஹார்ஸ் ரோட்டிலுள்ள ஸ்ரீமதி E. குரோ எழுதுவதாவது:—"தாங்கள் எனக்கு அனுப்பிய சிறிய டின் லார்மலீன் களிம்பு என்னை என் கஷ்டத்தினின்றும் நீக்கி, என் தலைவலி, மண்டை இடி முதலியவைகளைச் சாந்தப்படுத்தி என்னைச் சந்தோஷிக்கச் செய்தது. அதிகச் சிலவு செய்தும் குணமாகாமல், கடைசியில் தங்களால் குணமடைந்ததற்கு நான் தங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்".

இன்றைக்கு ஒரு புட்டியை உபயோகித்துப் பாருங்கள்: மூன்று ரூபாய் மணியார்டர் செய்தால் எல்லா விலாசத்திற்கும் அனுப்பப்படும்.

விலாசம்:—

ஆரல் மெடிகேஷன் பிர்க்பெக் ரோட்டு,
பெக்கன்ஹேம், இங்கிலாந்து.

*Address Orders to:—*

AURAL MEDICATION, BIRKBECK ROAD,
Beckenham, Eng.

# ரூரல் இந்தியா

(பாரேஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

ஆனரரி எடிடர், மானேஜர்:—

எ. ஸ்வாமினாதய்யர், B. A. ரிடயர்ட் டிப்டி கலெக்டர்

ஆபீஸ் : மைலாப்பூர் : மதராஸ்:

வால்யூம் VI. 1931ளு மேயீ நெ. 5


## கிராம முன்னேற்ற விஷயம்.

அண்ணாமலைக் கல்லூரி மாணவர் ஐக்கியத்தின் முன்பாக ஸ்ரீமான் எஸ். வி. இராமமூர்த்தி ஐ ஸீ. எஸ். அவர்கள் கிராமாபிவிருத்தி விஷயத்தைப் பற்றி ஒரு சிறந்த உபந்யாசத்தைச் செய்தார். கிராமாபிவிருத்தி இயக்கமானது சரியான இயக்கமல்லவென்று சிலர் எண்ணுவது தப்பென்றும் தற்போது அதில் பிரமுகர்களும், பல இராஜீய தேசீய சபைகளும் தங்களின் பூர்ண கவனத்தைச் செலுத்தி வருவதாலேயே அது சரியான இயக்கம் தானென்றும் கூறுகிறார். கிராமாபிவிருத்தி இயக்கம் நன்றாய் நடைபெற்றால் நமது தேசத்தில் க்ஷேமக்குறைவும், செல்வக்குறைவும் ஏற்படவே ஏற்படாவென்பதற்குச் சந்தேகமேயில்லை.

நமது தேசத்தில் 100-இல் 90 பெயர்கள் கிராமவாசிகள். படித்தவர்கள் நகரவாஸ சௌகரியங்களை அதிகரிப்பதிலேயே கவனத்தைச் செலுத்துகிறார்களே யொழிய கிராமவாஸ சௌகரியங்களை உயர்த்துவதில் கவனத்தைச் செலுத்துகிறதே யில்லை. பட்டணங்களிலுள்ள கல்விச்சாலைகளும் வைத்தியசாலைகளும், ரெயில்வேக்களும், ரஸ்தாக்களும் எடுக்கப்பட்டால் பட்டணங்கள் கிராமங்களைப் போல்தான் இருக்கும். நாம் நமது கல்லூரிகளிலிருந்து மேனாட்டு ஞானத்தை அடைகிறோம். அஞ்ஞானத்தை நாம் வயிறு வளர்ப்பதின் பொருட்டு உபயோகிக்கிறோமே யொழிய நமது தேசாபிவிருத்தியின் பொருட்டு உபயோகிக்கிறதேயில்லை. வைத்தியசாலைகள் நமது கிராமவாசிகளில் 100-இல் 5 பெயர்களுக்குக் கூட உபயோகப் படுத்துகிறதில்லை. வெகு கிராமங்களில் பள்ளிக்கூடங்களும், ரஸ்தாக்களும் இல்லவே இல்லை. மேல்நாட்டு இயந்திரங்களினால் உண்டாகும் சௌகரியங்

கள் பட்டணங்களில் தான் அடையப்படுகின்றன. அவைகள் கிராமங்களில் அடையப்படுகிறதில்லை. தற்கால விநோத வழிகள் கிராமங்களில் காணப்படுகிறதில்லை. கிராமங்களில் வீடுகள் குப்பை மேடுகளின் அருகில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிராம ஜனங்களுக்குச் சரீரத்தை மூடிக்கொள்ளக் கூட போதுமான வஸ்திரம் கிடையாது. அவர்கள் அரைவயிர் சாப்பாட்டைக் கூட அடைகிறதில்லை. அவர்களுக்கு மேற்கூறிய குறைவுகளி விருக்கக் கூடாதென்பதுதான் கிராமச் சீரமைப்பு இயக்கத்திற்கு முக்கிய நோக்கம்.

ஐரோப்பாவில் பௌதிக சாஸ்திரஞானம் ஏற்படும் வரையில், அதாவது 3 நூற்றாண்டுகளுக்கு முன்னே வரையிலும், கிராமங்கள் செழித்திருந்தன. பௌதிக சாஸ்திரப் படிப்புக் கிளம்பினதும் பட்டணவாஸ ருசி அதிகமாக ஏற்பட்டது. பௌதிக சாஸ்திரத் தத்துவங்களை யநுசரித்து இயந்திரங்களையும் கருவிகளையும் பிறப்பித்தவர்கள் தனிகர்களானார்கள்.

ஜனநாயக வழி பௌதிக சாஸ்திரஞானம் அதிகமாகப் பரவியதாலேயே உண்டாயிற்று. ஜனநாயக வழி இராஜீயத்திலும், செல்வாபிவிருத்தியிலும் உண்டாயிற்று. 40, 50 வருஷகாலமாக கூட்டுறவு இயக்கமென்கிற பெயரை வகித்துக்கொண்டு ஜனநாயக வழி செல்வாபிவிருத்தித் துறையில் வேலை செய்து வருகிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், பிரதி அங்கத்தினருக்கும் இலாப மேற்படும்படிச் செய்கின்றன. தனித்தனி நபர்கள் விற்பனை செய்து எல்லா இலாபத்தையும் தாங்களே அடைகிறதை கூட்டுறவு இயக்கம் ஒழிக்கிறது. கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வியவசாயிகளுள் உண்டாயிருக்கின்றன. கனடா, ஐர்லாந்து, நியூஜீலந்து, கலிபோர்னியா முதலிய தேசங்களில் கிராம ஜனங்கள் செல்வ விருத்தி வழியில் கூட்டுறவென்ற ஜனநாயகத் தத்துவத்தை யநுஷ்டித்து சங்கம் சேர்ந்து வியவசாய முயற்சிகளையும் மாசூல் விற்பனைகளையும் செய்கிறார்கள்.

ஜனநாயகம் செல்வ விருத்தி வழிகளிலும், இராஜீய வழிகளிலும் நன்றாய் அமையவேண்டுமானால் ஜனங்களுக்குக் கிராமாந்தரருசி இருக்கவேண்டும். நமது தேசத்திலும், சீனாவிலும் காலாகாலமாய் ஜனங்களுக்குக் கிராமாந்தர ருசி இருந்ததால்தான் அவர்களுடைய நாகரீகங்கள் அழியாமலிருக்கின்றன. நமது தேசத்தில் முற்காலத்தில் கிராமங்களுக்குப் பிரயாண வசதிகள் சரிவர அமையாமலிருந்தமையால் ஒவ்வொரு கிராமத்திலும் பலவித ஊழியர்களும் அமைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய வம்சத்தவர்களும் அவர்களுடைய ஊழியத்தையே அநுஷ்டிக்க வேண்டுமென்று தான் அவர்கள் பல ஜாதிகளாக அமைக்கப்பட்டார்கள். இவ்வாறு ஏற்பட்ட ஜாதிகள் இப்பொழுது அவைகளேற்பட்ட காரணத்தை மறந்து ஒன்றைக் கொன்று உயர்வு தாழ்மையைக் கூறுகின்றன. அவைகள் வித்தியாசம்

194..03



பாராட்டாமல் ஒத்துவாழ்ந்தால் வெகு திறமான ஜனநாயகம் நமது கிராமங்களில் அமைந்து ஓங்கி வருமென்பதில் சந்தேகமில்லை.

பாரேஸ்டு பஞ்சாயத்து இயக்கமானது நமது மாகாணத்தில் பிரஜா க்ஷேம நிலையை அடைக்கிற ஜனநாயக இயக்கமல்லவா? பிரமுகர்களின் கிளர்ச்சிகளால் ஏற்படுத்தப்பட்ட இந்த சிறந்த இயக்கம் முன்னுக்கு வர வேண்டியதற்குப் பஞ்சாயத்தார்களும் கிராம ஜனங்களும் அதில் ருசியை வகித்து, ஒன்று கூடி, ஒற்றுமை பாராட்டி, உழைத்து வரவேண்டாமா? மேல்மேலும் கிளர்ச்சி செய்தாலொழிய நம்முடைய இயக்கம் நிலைநிற்காதென்று அவர்களுக்குத் தெரியவில்லையா? நமது மாகாண யூனியனில் ஏன் இன்னும் அநேக பஞ்சாயத்தார்கள் பங்குகளை எடுத்துக்கொள்ளாமலிருக்கிறார்கள்? நமது பத்திரிகையாகிய ரூரல் இந்தியாவிற்குச் சந்தாவை பாக்கியாக ஏன் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்? நமது தேசம் செல்வத்தில் ஓங்க வேண்டுமென்கிற கருத்து அவர்களுக்கு இல்லவே இல்லையா? நமது பஞ்சாயத்து பாரெஸ்டுகளால் கிராம ஜனங்களுக்கு க்ஷேமம், செல்வம், சுகம் ஏற்படுகிறதில்லையா? இன்னும் மேல்மேலும் அதிகமாய் ஏற்படாதா? இனியாவது பஞ்சாயத்தார்களும் கிராம ஜனங்களும் நமது மாகாண யூனியனையும் ரூரல் இந்தியாப் பத்திரிகையையும் நன்றாய் ஆதரித்து, நமது ஜனநாயக இயக்கமாகிய பாரேஸ்டு பஞ்சாயத்தியக்கத்தை ஓங்கச் செய்வதாகிய சிறந்த தேச சேவையை கைக்கொள்ள வேண்டுமென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கிராமாபிவிருத்தி இயக்கத்தின் சம்பந்தமாக நமது ஆங்கில சஞ்சிகையில் ஸ்ரீமான் கே. எஸ். இராமசுவாமி சாஸ்திரிகள் மற்றொரு சிறந்த கட்டுரையை வரைந்திருக்கிறார். அவருடைய கட்டுரையின் சுருக்கம்:— உலகத்தில் ஒவ்வொரு தேசத்திய ஜனங்களும் உயர்வான க்ஷேமசுக செல்வ நிலையில் இருக்க வேண்டியது. அவர்கள் இதர தேசத்தவர்கள் தங்களை ஆக்கிரமிக்காமலிருக்கும்படி பாதுகாத்துக் கொள்கிற சக்தியை பொறுத்திருக்கிறது. இந்தியாவின் ஜனங்களும் சீனாவின் ஜனங்களும் மற்ற தேசத்தவர்களைக் காட்டிலும் வெகு தாழ்ந்த க்ஷேம சுகச்செல்வ நிலையிலிருக்கிறார்கள். ஆங்கிலர்களும் அமெரிகர்களும் வெகு உயர்வான நிலையில் இருக்கிறார்கள்: மூலதனம் கொடுக்கிற தனிகர்களிருந்துகொண்டு இலாபங்களை அதிகமாக அடைவதினாலேயே அத்தேசங்கள் அழிந்துபோகுமென்பதில்லை. மூலதனக்காரர்களில்லாமையினால் இந்தியாவும் சீனாவும் நிரம்ப செழித்துமில்லை. மூலதனத்தைச் சேகரிக்கப்பட்டவர்கள் தங்களுடைய புத்தியைக் கருவியாக உபயோகிக்கிற தொழில்காரர்களே. ஆகவே, ஸோஷலிஸமென்கிற க்ஷேம சுக செல்வவழி மூலதனக்கார வகுப்பை அடியோடு எடுத்துவிட

உத்தேசிக்கக்கூடாது. அப்படி அது பாடுபட்டால் செல்வம் ஓங்க வேண்டிய துறைகளில் ஜனங்கள் புத்தியைச் செலுத்துவதே நின்றுபோம். தேசத்தில் செல்வ விளைவு குறையுமாகில் ஜனத்தொகையின் க்ஷேம சுகச்செல்வ நிலையே குறையும். ஜனங்களின் க்ஷேம சுகச்செல்வ நிலையை உயர்த்திப் பிரதி நபரும் சுகங்களையும் செல்வத்தையும் அனுபவிக்கும் படியாகச் செய்யக்கூடியது. பல தொழிலாளி வகுப்புகளுடைய, வீண் ஜம்பம், அதிகச்செலவு முதலியவைகளில் அவ்ருசியில்லாத ஜனங்களுடைய ஜனசமூகம் தான் பண்டை நாள்களிலிருந்து நம்முடைய தேசத்தில் அவ்விதசமூக ஏற்பாடு வழங்கி வருகிறது. அச்சமூக ஏற்பாடானது ஜனங்களுக்குத் தியாக குணத்தை உண்டாக்குகிறது.

மனிதர்கள் தற்கால வழிகளை விட்டுவிட்டு வியவஸாயத் தொழிலுக்கே திரும்வார்கள் என்று சொல்லமுடியாது. நாணய உபயோகமே ஒழியுமென்றும், ஜனங்கள் வியாபார வழியில் நாணயத்தை யுபயோகிப்பதற்கு பதிலாக சாமான்களையே மாற்றிக்கொள்ளுவார்களென்றும் சொல்வதற்கில்லை தொழிற்சாலை யுற்பத்திகளும் நாணய உபயோகமும் மேல்மேலும் அதிகரிக்கத்தான் அதிகரிக்கும். அப்படி ஏற்படுவதால் உணவு தானியப்பயிர் குறையுமென்றும், தொழில்களுக்கு வேணடிய பயிர்கள் அதிகரிக்குமென்றும், பெறுமைக்கு அடையாளம் பணம் என்றும் சொல்லக்கூடுமா? நாம் எவ்விதமான சமூக ஏற்பாட்டை உண்டாக்க வேண்டுமென்றால், எந்த ஏற்பாட்டில் வியவஸாய முயர்ச்சிகளும் தொழில் முயர்ச்சிகளும் சமமாக விருக்குமோ, மூலதனக்காரர்கள் இதரர்களையும் தங்களைப்போல மனிதர்கள் தான் என்று எண்ணி அதிக வட்டிகளையும் இலாபங்களையும் விரும்பமாட்டார்களோ, அதைத்தான் உண்டாக்க முயல வேண்டும்.

மேநாட்டு தேசங்களில் ஜனங்கள் பணத்தைச் சம்பாதித்துச் சேர்ப்பதற்காக ஓய்வேயில்லாமல் உழைத்தார்கள். இங்கிலாந்தில் உணவுப்பொருள் விளைச்சலும் பொன் வெள்ளி உற்பத்தியும் குறைவாக விருந்தபோதிலும் அந்த தேசத்தில் இரும்பும், நிலக்கரியும் அதிகமாக விருப்பதால் செல்வ விருத்தி அதிகமாக ஏற்படுவது வெகு சுலபமாக வாய்ந்தது. அத்தேசத்தின் ஆளுகைக்குள் மேல்மேலும் இதர தேசங்கள் அமைந்ததும் புதிது புதிதாக இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் அதின் செல்வ விருத்தியை இன்னும் அதிகரித்தன. இதைப்பார்த்து ஜர்மனியும் அமெரிகாவும் மற்ற தேசங்களும் இங்கிலாந்தின் உற்பத்திகள் புகாதபடிக்கும் தங்களுடைய சொந்த உற்பத்திகள் அதிகரிக்கும்படிக்கும் ஏற்பாடுகளைச் செய்துகொண்டன. பல தினிசு வஸ்துக்களின் உற்பத்திகள் உலகெங்கும் அதிகரித்தன. பல தேசங்களில் செல்வநிலை குறைந்தது. உற்பத்தி தேசங்களில் அதிக உற்பத்திகளும் அவைகளை வாங்குகிற தேசங்களில் கிராக்கிக் குறைவும் ஏற்பட்டன.



ஆனால் மேற்கூறிய அதிக விளைச்சல்கள், அதிக உற்பத்திகள் எக்காலத்துக்கும் நடைபெறா. ஏழ்மையாய்ப்போன தேசங்கள் இவ்வுற்பத்திகளை வாங்கவே முடியாத காலம் சீக்கிரத்தில் வரும். தேசங்களுள் இவ்வித நிலையேற்படுவதால் சண்டை சச்சரவுகளுமேற்படும். அதிக உற்பத்தி தேசங்களிலேயே ஜனங்கள் வீண் ஜம்ப வாழ்க்கை யநுஸரித்து க்ஷீணத்தையடைவார்கள். இவ்விதக் கோளாறு ஏற்படாமலிருக்க வேண்டுமானால் ஜனங்கள் சுவதேச உற்பத்திகளைத் தாங்களே வாங்கி உபயோகிக்கிற வாழ்க்கையை அநுஸரிக்க வேண்டும் மேலும் அவர்கள் மற்ற தேசங்களோடு ஒத்துழைக்கிற உணர்ச்சியையும் பாருட்டவேண்டும். தற்காலத்தில் ஏகாதிபத்தியங்களெல்லாம் வியாபார நிமித்தமாகவே உண்டாக்கப்பட்டன. அமெரிக ஐக்கிய நாடுகளிழக்கப்பட்ட பின்பு பிரிடிஷர்கள் இன்னொரு ஏகாதிபத்தியத்தை உண்டாக்கத் தொடங்கினார்கள். வியாபார மோங்கி பிரிடிஷர்கள் அந்நிய நாடுகளிலிருந்து பணத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்றே புது ஏகாதிபத்தியம் தோன்றியது. இவ்வுத்தேசத்துடன்தான் பல அந்நிய தேசங்கள் பிரிடனுக்குச் சேர்க்கப்பட்டது. இவ்வுணர்ச்சியினால்தான் ஜர்மனியுடன் யுத்தம் ஏற்பட்டது. யுத்தமேற்பட்டு உலகத்திற்குப் பலவிதங்களில் நஷ்டமேற்பட்ட பின்பும்கூட மேநாட்டு தேசங்கள் இவ்வுணர்ச்சியை விடவில்லை. எவ்வளவோ உயிர்ச்சேதங்கள் ஏற்பட்ட பின்புதான் மேநாட்டினர் வீண் ஜம்பமில்லாத தெய்வபக்தி வாழ்க்கையைப் பின்பற்றுவதினாலும், உலக க்ஷேமத்துக்கு ஒத்துழைப்பதினாலும்தான் தங்களுடைய தனிக்ஷேமமும், பொதுவாக பிரஜா க்ஷேமமும், உலக க்ஷேமமு மேற்படுமென்று தெரிந்து கொள்வார்கள். மனிதர்கள் யோசனைகளைச் செய்துகொண்டும், ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டும் பொருள்களை யுற்பத்தி செய்துகொண்டும் சண்டை சச்சரவுகளைச் செய்துகொண்டும் வருகிறார்களே யொழிய தாங்கள் நல்லொழுக்கங்களையும் எல்லோரும் கடவுள் படைத்த மனிதர்கள்தான் என்கிற உணர்ச்சியையும் கைக்கொள்கிறதில்லை. உலகத்தில் பணக்கார தேசங்களிலெல்லாம் சிலர்தான் அளவற்ற தனத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் மற்ற கோடியான கோடி ஜனங்கள் தரித்திர நிலையிலேயே யிருக்கிறார்கள். தற்காலத்தில் ஜனங்கள் வெகு விரைவில் தனிகர்களாக வேண்டுமென்று நோக்கம் கொள்கிறார்கள். அந்நோக்கம் பயன்பட வேண்டியதற்காக சில ஜனங்கள் மற்றவர்களை ஏமாற்றவோ நாசம்பண்ணவோ துணிகிறார்கள்.

எந்த தேசத்தில் ஏறக்குறைய எல்லா நபர்களும் செல்வக்குறைவில்லாமலிருக்கிறார்களோ அந்த தேசம்தான் செல்வத்திலும் பிரஜா க்ஷேமத்திலும் உயர்ந்ததாகும்; அப்படிப்பட்ட தேசத்தில் கஷ்ட நிலையிலிருப்பவர்களின் சங்கியை அல்பமாக விருப்பதோடு அதில் ஜனங்கள் நாணயங்களையும்

நோட்டுக்களையும் வைத்துக் கொண்டிருப்பதோடு அவர்கள் கல்வியையும், கலைகளிலும், சாஸ்திரங்களிலும், பியாய்ஸத்திலும், மத விஷயங்களிலும் ஞானத்தையும் அடைந்திருப்பார்கள். ஜனங்கள் அதிகமான காசு பணத்தையே விரும்பாமல் ஜம்பமில்லாத வாழ்க்கையினு லுண்டாக்கக்கூடிய சுகத்தையே தேடுவார்கள்.

மேல்கூறியவற்றிலிருந்து என்ன ஏற்படுகிறது? நம்முடைய பாரத தேசமானது உலகத்திலுள்ள மற்ற எல்லா தேசங்களுக்கும் உதவ வேண்டுமென்று கடவுளின் தீர்மானம் போலிருக்கிறது. அவைகளுக்கு உணவுப் பொருள்களை யளிக்க வேண்டியது அதன் கடமையாகிறது. பாரத தேசம் தனது பண்டைகாலக் கைத்தொழில்களைக் கைப்பிடிக்க வேண்டும். அவைகளில் எவைகளைத் தொழில் சாலைகளில் அனுஷ்டிக்க வேண்டுமென்றும் எவைகளைக் குடிசைத் தொழில்களாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் அது தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அகில உலக சபையார் ஒவ்வொரு தேசத்திலும் இன்ன இன்ன தொழிற்சாலைத் தொழில்கள்தான் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானித்தால் யுத்தங்களே நின்றுபோய்விடும். ஒவ்வொரு தேசமும் இயற்கையில் சில தொழில்களைத்தான் நன்றாய் அநுஷ்டிக்கக்கூடுமாதலால் இவ்வித தீர்மானத்தை அகில உலக சபைக் கைக்கொள்வது வெகு அவசியமாகும். நமது தேசத்தில் எல்லா தொழிற்சாலைத் தொழில்களும் நடத்தப்படுமென்றும், மற்ற தேசங்களிலிருந்து நமக்கு வரும் பொருள்களெல்லாமே நம்முடைய தேசத்திலேயே பிரமாத அளவில் உற்பத்தி செய்யப்பட்டு நம்முடைய தேசத்திற்கு உபயோகத்திற்கு வேண்டியவைபோக மீதி அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகு மென்கிற பயம் உலகத்தாருக்கு இருக்க வேண்டியதில்லை. நமது தேசத்தவர்கள் கிராமாபிவிருத்தியைச் செய்து, கூட்டுறவை யநுஷ்டித்துக் குடிசைத் தொழில்களை உண்டாக்கி தங்களுடைய க்ஷேமத்தையும் செல்வ நிலையையும் உயர்த்திக்கொள்ள வேண்டும், பிறகு உலக க்ஷேமத்திற்கும் ஈடுபட வேண்டும்.

சென்னையில் உண்டாயிருக்கும் 'பாரேஸ்டு பஞ்சாயத்துகள்' தான் மேற்கூறியபடி முயர்ச்சி செய்வதற்கு மூல ஸ்தாபனங்கள். கிராமங்களில் வியவஸாயம், குடிசைத் தொழில்கள் ஓங்கி செல்வத்தையும் க்ஷேமத்தையும் நிலநிறுத்தக்கூடியவை இவைகளே. கிராம ஜனங்களைக் கூட்டுறவு முயர்ச்சிகளிலும் ஜம்பமில்லாத சத்திய வாழ்க்கையிலுமமைத்து அவர்களுக்குத் தியாக குணத்தையும் பரோபகார சிந்தையையும் உண்டாக்கக்கூடியது பாரேஸ்டு பஞ்சாயத்தியக்கமே. ஆகவே, பஞ்சாயத்தார்களும் கிராம ஜனங்களும் பாரேஸ்டு பஞ்சாயத்தியக்கத்தை உயர்த்தி முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது தங்களுடைய முதல் கடமையென்று உணர வேண்டும்.



# கிராம ஜனங்கள் கடன்படுதல்.

## தொட்டகன்னி கிராமம்.

கிராம ஜனங்களின் கடன்களின் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டால் ஏற்படக்கூடிய விவரங்களைக் கொண்டு அக்கடன்களின் காரணங்கள் சரிவர அறியப்படும். மைசூர் இராஜ்ஜியத்தில் ஹாசன் ஜில்லாவில் தொட்டகன்னி கிராம ஜனங்களின் சம்பந்தமாக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. தொட்டகன்னி கிராமமானது சென்னராயப்பட்டணத்திலிருந்து ஹோல்நரசிபூருக்குச் செல்லும் ரஸ்தா ஹேமவதி ஆறை நெருங்குகிற ஸ்தலத்திலிருக்கிறது. 1918-ம் வருஷத்தில் நடத்தப்பட்ட ஸர்வேயின்படி அந்த கிராமத்தின் விஸ்தீரணம் 969 ஏகர்களாயிருந்தது; அதில் சாகுபடி நிலம் 702 ஏகராக்களாக விருந்தது. 1927 இல் அதில் ஜனத்தொகை 623. அந்த சங்கியையில் 305 ஆண்மக்கள், 318 பெண்மக்கள், 358 பெயர்கள் வயது வந்தவர்கள், 265 குழந்தைகள், 112 குடும்பங்கள். 112 குடும்பங்களில் 102 குடும்பங்கள் வியவஸாயத் தொழிலையே அநுஷ்டிக்கின்றன, 7 குடும்பங்கள் நிலச் சொந்தக்காரர்களாக மாத்திரம் இருந்து கொண்டு பயிர் வேலையைச் செய்யாமலிருக்கின்றன, பாக்கி 3 குடும்பங்கள் வேறு தொழில்களை அநுஷ்டிக்கின்றன. 92 குடும்பங்களுக்குச் சொந்த நிலமிருக்கிறது, ஆனபோதிலும் அவைகள் ஏழ்மை நிலையிலேதான் இருக்கின்றன.

112 குடும்பங்களுள் 76 குடும்பங்களுக்குக் கடன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் மொத்தக்கடன் தொகை 12 ரூபாயிலிருந்து 1600 ரூபாய் வரையிலும் பலவாறுக விருக்கின்றன. கிராமத்தில் கடன்களின் சங்கியை 137, மொத்தக்கடன் தொகை ரூ 23,200. மேற்கூறிய ரூ 23,200 இல் ரூ 18300 கிராமத்துக்குள்ளேயே வாங்கப்பட்ட தொகைகளின் மொத்தம், ரூ 4900 வெளியிலிருந்து வாங்கப்பட்ட தொகைகளின் மொத்தம். அடியில் குறிக்கப்பட்ட விவரங்கள் கவனிக்கத்தக்கவை:—

(1)

| கடன் தொகை | ரூ 50க்குள் | ரூ 50இலிருந்து 100க்குள் | ரூ100இலிருந்து 250க்குள் |
|---|---|---|---|
| குடும்பங்கள் | 4 | 14 | 26 |

| ரூ 250இலிருந்து 500க்குள் | ரூ 500இலிருந்து 1000க்குள் | ரூ 1000க்கு மேல் | மொத்தம் |
|---|---|---|---|
| 22 | 7 | 3 | 76 |

(2)

| கடன் தொகை | ரூ 50க்குள் | 50இலிருந்து 100க்குள் | 100இலிருந்து 200க்குள் |
|---|---|---|---|
| | 44 | 39 | 23 |

| 200இலிருந்து 300க்குள் | 300இலிருந்து 400க்குள் | 400இலிருந்து 500க்குள் | 500இலிருந்து அதற்கு மேலும் | மொத்தம் |
| --- | --- | --- | --- | --- |
| 5 | 16 | 5 | 5 | 137 |

தொகை ரூ 100 இலிருந்து 250க்குள் உள்ள கடன்களும், அக்கடன்களை வாங்கியிருக்கிற குடும்பங்களின் சங்கியையும்தான் அதிகமாகக் காணப்படுகின்றன. ரூ 100 இலிருந்து ரூ 250 வரையில் கடன்களையுடைய குடும்பங்கள் தான் அதிகமாக விருக்கின்றன. அவைகள் 4, 5 தடவைகளில் 50 ரூபாயிக்குக் குறைந்த தொகைகளைப் பெற்றுக் கொள்கின்றன. கிராமத்திய மொத்தக் கடன் தொகையாகிய ரூ 23200இல் 17700 ரூபாய் அடமானங்களின் மேல் வாங்கப்பட்ட கடன்கள். அடமானக் கடன்களையுடைய குடும்பங்களின் சங்கியை 49 ஆகவே சராசரியில் ஒவ்வொரு குடும்பமும் 305 ரூ கடன்களை உடைத்தாயிருக்கிறது. அடமானக்கடன் தொகை சராசரியில் குடும்பம் ஒன்றுக்கு ரூ 361 ஆகத் தேர்கிறது.

(தொடரும்.)

# சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

கல்கத்தாவில் பிரசுரமாகும் ஐரோப்பியப் பத்திரிகையாகிய ஸ்டேட்ஸ்மென் இவ்வாறு கூறுகிறது:—

"சென்னையில் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் சென்னை 1882-ம் வருஷத்திய பாரெஸ்டு சட்டத்தின்படியும் கவர்மெண்டார் கிராம ஜனங்களின் சௌகரிய சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் உத்திரவுகளின்படியும் முயர்ச்சி செய்கின்றன. பாரெஸ்டு நிர்வாஹமானது எல்லா மாஹாணங்களிலேயுமே திருப்திகரமானதாகவிருக்கவில்லை. மயிலாப்பூரில் நடைபெற்ற பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் ஐந்தாவது மாஹாண மஹா நாட்டில் ஸ்ரீமான் வீ இராமதாஸ் பந்துலுகாரு அக்ராஸன மொழியில் பாரெஸ்டு பஞ்சாயத்து நிர்வாஹம் சென்னை மாஹாணத்தில் வெகு அதிருப்திகரமாக விருக்கிறதென்றும் பாரெஸ்டு பஞ்சாயத்து ஏற்பாடே அடியோடு மாற்றப்பட வேண்டுமென்றும் கூறினர். தற்போதில் கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்து சம்பந்தமாக உள்ள கவர்மெண்டு ஆர்டர்களை மாத்திரம் சேர்த்துத்திரட்டி ஒரு ஸ்டாண்டிங்கு ஆர்டரை வெளியிடுவது சரியல்லவென்றும் கவர்மெண்டார் பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக அவர்களின் நோக்கங்களை மாற்றி அதை கிராமாபிவிருத்தி தேசாபிவிருத்திகளுக்குத் தக்கபடி அமைக்க வேண்டுமென்று கூறுகிறார்.

பாரெஸ்டு இலாகாவானது கிராம ஜனங்களின் சௌகரியங்களிற்கேற்றபடி முயர்ச்சி செய்யவில்லையாதலால் கவர்மெண்டார் அது சம்பந்தமாக



விசாரணைகளைச் செய்து யோசனைகளைச் சொல்லும்படியாக 1912-ம் வருஷத்தில் பாரெஸ்டு கம்மிட்டியென்கிற ஒரு கம்மிட்டியை நியமித்தார்கள். அக்கம்மிட்டியானது விசாரணைகளைச் செய்து கிராம ஜனங்களுக்குக் குறைகளிருப்பது, வாஸ்தவம் தான் என்று மொழிந்து பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ஏற்படவேண்டிய நிமித்தத்தை வற்புறுத்திச் சிபார்சு செய்தார்கள். கவர்மெண்டார் அவர்களின் சிபார்சை மதித்துப் பாரெஸ்டு பஞ்சாயத்துகளை யுண்டாக்கினார்கள். கிராம ஜனங்களுக்கு மேய்ச்சல், எருத்தழை, விறகு முதலியவைகளைக் கொடுக்கக்கூடிய காடுகளைப் பஞ்சாயத்து நிர்வாகத்துக்கு ஒப்புவிக்கவேண்டும் என்கிற நோக்கத்தை வெளியிட்டார்கள். மேலும் அவர்கள் பஞ்சாயத்துக் காடுகளின் சம்பந்தமாக இலாபத்தையோ வரும்படியையோ உத்தேசிக்கவில்லையென்றும் கூறினார்கள். ஜனங்கள் இவ்வித நோக்கங்களுடன் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ஏற்படுவதில் மிகுந்த சந்தோஷத்தை யடைந்திருந்தார்கள். கவர்மெண்டார் 22 ஜில்லாக்களில் 1100 பஞ்சாயத்துகளை ஏற்படுத்தினார்கள். பஞ்சாயத்துக் காடுகளின் மொத்த விஸ்தீரணம் 3500 சதுர மைல்கள். ஆரம்பத்திலே பஞ்சாயத்துகளின் முயற்சிகள் திருப்திகரமாக யிருக்கவில்லை. இப்பொழுதும் பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்குச் சுய அதிகாரமேயில்லை. பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்களின் அதிகாரத்திற்குள் தான் பஞ்சாயத்துகள் வேலை செய்யவேண்டியிருக்கின்றன.

பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்கும் கவர்மெண்டுக்கும் உள்ள குத்தகை ஏற்பாடு இந்தியா கவர்மெண்டுக்கும் மாகாண கவர்மெண்டுகளுக்கும் உள்ள காண்டிராக்டு ஏற்பாட்டைப் போலவே வெகு அதிருப்திகரமாக விருக்கிறது. பஞ்சாயத்துகள் தங்களுக்கு வரும் வரும்படியில் சிலவுபோக மீதித் தொகையை ஒரு பைசாக்கூட குறைவில்லாமல் கவர்மெண்டாருக்குக் கட்டிவிடவேண்டி யிருக்கிறது. இப்படிச் செலுத்தப்படும் அஸ்ஸெஸ்மெண்டுகள் பஞ்சாயத்துகளால் தாங்கக்கூடாதவைகளாக விருக்கின்றன. தவிரவும் கவர்மெண்டார் மூன்று வருஷங்களுக்கு ஒரு விசை அஸ்ஸெஸ்மெண்டுகளை உயர்த்திக்கொண்டும் வருகிறார்கள். பஞ்சாயத்துகளுக்குத் தங்களுடைய அபிவிருத்தி முயற்சிகளால் ஏற்படும் வரும்படிகள்கூட அஸ்ஸெஸ்மெண்டுகளில் சேர்க்கப்படுகின்றன. குத்தகைப் பணம் இன்ன தொகையாக விருக்கும் என்றும் பஞ்சாயத்துகள் குத்தகைகள் புதிப்பிக்கப்படும் காலங்களில் உத்தேசிக்கக் கூடுகிறதில்லை. குத்தகைப் பணங்கள் குத்தகை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டியிருக்கின்றன. இவ்வித அசௌகரியங்களும் கஷ்டங்களும் பஞ்சாயத்துகள் அபிவிருத்தி முயற்சிகளை நடத்துவதற்கு இடையூறுகளாக வாய்கின்றன. அபிவிருத்தி முயற்சிகளால் ஏற்படும்

அதிக வரும்படிகள் பஞ்சாயத்துகளைத் தான் சேரவேண்டும். கவர்மெண்டார் பஞ்சாயத்துகளிலிருந்து இலாபத்தை அடைய உத்தேசிக்கவே கூடாது. அஸெஸ்மெண்டுகள் வெகு வெகு குறைவாக விதிக்கப்படவேண்டும். அவைகள் பல தவணைகளில் வசூலிக்கப்படவேண்டும்."

ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை மேற்கூறிய உபந்நியாஸத்தைப்பற்றி எழுதுகையில் பஞ்சாயத்துக் காடுகளிலிருந்து இப்பொழுது கவர்மெண்டார் அடையும் வரும்படியானது அவர்கள் பஞ்சாயத்துகள் ஏற்படுவதற்கு முன் அவைகளிலிருந்து அடைந்த வரும்படிகளைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாகவே யிருக்கிறதென்றும், அப்படி அவர்கள் வரும்படியை அடைவது 40 வருஷங்களுக்கு முன் அவர்கள் பஞ்சாயத்துக்களிலிருந்து வரும்படியையே உத்தேசிக்கவில்லையென்று அளித்த வாக்குக்கு நேர் விரோதமாகவிருக்கிறதென்றும் கூறுகிறது.

x x x x x x

பட்டணங்களில் உத்தியோகமாக விருப்பவர்களும் மாணவர்களும் ரஜாக்காலங்களில் கிராமங்களுக்குச் சென்று அங்கே ரஜாவைக் கழிக்க விரும்புகிறதில்லையா? அவர்கள் ஏன் அப்படி விரும்புகிறார்கள். பட்டணங்களின் புழுதியிலும் ஓயாத ஓசைகளிலும் ஜன நெருக்கத்திலும் இருந்து அலுத்துப் போய் அவர்கள் வருஷத்தில் கொஞ்ச காலத்தையாவது தோப்புக்களும் துறவுகளும் இருக்கிற கிராமங்களில் செலவழிக்கப் பிரியப்படுகிறார்கள். கிராமங்களில் நோய் கிடையாது. புழுதி, கூச்சல் முதலிய தொந்திரவுகள் கிடையாது. அவைகளில் ஜனநெருக்கமும் இல்லை. அவைகளிலுள்ள மண் ரஸ்தாக்களும் தோப்புக்களும் ஆறுகளும் குளங்களுமே மனதிற்கு சாந்தியைக் கொடுக்கின்றன. ஆகவே, எந்த தேசத்திலும் பட்டண ஜனங்கள் கொஞ்ச காலத்தையாவது கிராமாந்தரங்களில் கழிக்க விரும்புகிறார்கள். தற்காலத்தில் பல தேசங்களில் ரோட்டு போடவேண்டியதற்காக பல இடங்களில் விருக்ஷங்களை வெட்டிவிடுகிறார்கள். கிராமங்களிலுள்ள விருக்ஷங்களில் அநேக விருக்ஷங்கள் இக்காரணத்தினாலேயே வெட்டப்படுகின்றன. ஜப்பான் தேசத்தில் பிரதி வருஷமும் புதிது புதிதாக கிராமங்களிலும் ரஸ்தாக்களிலும் விருக்ஷங்கள் நடப்படுகின்றன. வருஷம் ஒன்றுக்கு இத்தனை விருக்ஷங்கள் நடப்பட வேண்டுமென்கிற நிபந்தனை ஒன்று இருக்கிறதாம். அந்த தேசத்தில் பிரதி கிராமத்திலும் நந்தவனங்களிருக்கின்றன. நமது தேசத்தில் காடுகள் அழிக்கப்படுகின்றன. தோப்புக்களும் பல காரணங்களுக்காக வெட்டப்படுகின்றன. கிராமாந்தரங்களில் தோப்புக்களும் காடுகளும் ஸம்ரக்ஷிக்கப்படவேண்டியது ஜனங்களின் சௌகரியங்களுக்கும் ஆரோக்கியத்துக்கும் அவசியமானது. நம்முடைய தேசத்திலும் ஜப்பானைப் போலவே பிரதி வருஷமும் புதிய விருக்ஷங்களை நடுகிற வழக்கத்தை யநுஸரிக்கவேண்டும். இது சம்பந்தமாக கிராமவாஸத்தைப் பற்றி ஆங்கில கவி அலெக்ஸாந்தர் போப்பு வரைந்திருப்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும்.



என் கிராமத்திலேயே நான் என் ஆயுளைக் கழிக்க விரும்புகிறேன். நகர வாழ்க்கை மனிதரது தேவையைப் பெருக்கி, அவனை ஆடம்பர வாழ்க்கையில் புகுத்திவிடுகிறது. நான் என் அருமையான கிராமத்திற்குச் சென்று ஆடம்பரமற்ற ஒரு இயற்கையான வாழ்க்கை நடத்துவேன். எனது தேவையும் மிகக் கொஞ்சமாகவே யிருக்கும். நான் வைத்து வளர்த்த மரங்கள் ஆங்கு எனக்கு நிழல் தரும். அவை எனக்கு அன்புகூர்ந்து தரும் தழைகளினால் ஒரு நேர்த்தியான குடிசை யமைப்பேன். ஆங்கு கிடைக்கும் காய்கறி கிழங்குகளைப் புசிப்பேன். அம் மரங்களில் பட்டுப்போன கிளைகளை வெட்டி வீழ்த்தி, அடுப்பில் விறகுகளாகச் சமைக்க எரியவிடுவேன். அவ் வடுப்பண்டை மாரி காலத்தில் குளிர் காய்வேன். அருகாமையிலுள்ள எனது நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி ஏர் பிடித்து உழுவேன். ஆகவே, நான் வைத்து வளர்த்த மரங்கள், எனக்கு நிழல் வெயிலின் கொடுமையினின்றும் என்னைக் காப்பாற்றுகிறது. அவைகளே என் அடுப்பிற்கு விறகுகள் தருகின்றன. என் குடிசையின் கூரைக்கு அவை தழைகள் தருகின்றன. அவைகளே, நான் தாகமாயிருக்கும் போது எனக்குக் கனிகள் தருகின்றன. இத்தனை சுகங்களையும் எவை தருகின்றன. நான் சிரமப் பிரயாசைப்பட்டு வைத்து வளர்த்த அம் மரங்களன்றோ, எனக்கு இத்தனை சுகங்களையும் தருகின்றன? நிலத்தைச் சீர்படுத்தித் தண்ணீர் பாய்ச்சி ஏர் பிடித்து, வேர்வை ஆற்று நீர் போல பெருக்கெடுத்து ஓட, உழுது பயிர் செய்கிறேன். கொஞ்ச காலத்தில் அந் நிலத்திலிருந்து பொன் நிறமான தானியக் குவியல்களை என் உண்மையான உழைப்பிற்குப் பரிசாக அறுவடை செய்கிறேன். இத்தனை சுகங்களையும் ஒருவர் கிராம வாழ்க்கையிலேயே காணலாம்.

## சென்னை சட்டசபையில் நிலவரி சம்பந்தமாகவும், காடுகளின் சம்பந்தமாகவும் விவாதங்கள்.

### I. நிலவரி திட்ட சம்பந்தமான விவாதங்கள்.

கவர்மெண்டின் வரவு செலவு திட்டங்கள் நிர்ணயிக்கப்படுகிற காலங்களில் சென்னைச் சட்டசபையில் கவர்மெண்டாரின் நோக்கங்களைப்பற்றியும் பிழைகளைப்பற்றியும் தேர்தல்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் விவா

தம் செய்வது வழக்கம். அவ்வழக்கத்தையொட்டி ரெவினியூ மெம்பர் வாரண்டு ரெவினியூ சம்பந்தமான திட்டங்களை சபையை ஆமோதிக்கும்படி கேட்டுக்கொண்ட பொழுது அப்துல் ஹமீதுகான் அவர்கள் நிலவரி வசூல் சம்பந்தமாகச் சட்டசபைக்கு அதிகாரமிருக்க வேண்டுமென்று கூறி திட்டத்தைக் குறைக்க வேண்டுமென்று பிரேரேபணை செய்தார். ஸ்ரீமான் ஏ. பி. ஷெட்டி அவர்கள் அப்பிரேரேபணையை ஆமோதித்துப் போகையில் சென்னை கவர்மெண்டார் நிலவரும்படியில் பாதியைத் தீர்வையாக அடைவது பிசகென்றும் அவர்கள் பஞ்சாப் கவர்மெண்டைப்போலவே கால் பங்கைத்தான் அடைய வேண்டுமென்றும் கூறினர். அவருக்குப்பின்பு ஸ்ரீமான் எம். ஏ. மாணிக்கவேலு நாயகர் பேசினர். அவர் தற்போதில் ஜனங்களுக்குப் பணமில்லை யாதலாலும், வெள்ளத்தினல் பயிர்ச்சேதம் பலவிடங்களில் ஏற்பட்டபடியாலும் கவர்மெண்டார் வரிவஜா விஷயத்தில் தாராளமாக விருக்க வேண்டுமென்றும் கிஸ்துக்களைக் கொஞ்சகாலங் கழித்து வசூல் செய்ய வேண்டுமென்றும் மொழிந்தார். ஸ்வாமி ஸஹஜானந்தமும் அவ்வபிப்பிராயத்தையே கூறினர். ஸ்ரீமான் ரங்கஸாமி ரெட்டியார் ஒரு ஸர்வே நம்பரில் ஒரு பாகம் பயிர் செய்யப்பட்டால்கூட கவர்மெண்டார் முழு ஸர்வே நம்பருக்கும் வரியை வசூலிக்கிறது பிசகென்று எடுத்துக் காட்டினர். மாபூப் அலிபெக் அவர்கள் பலவாறுக ஏழைக்குடியானவர்களின் தலையில் தீர்வையின் கொடுமை விழுவதைப்பற்றி எடுத்துக் காட்டினர். ஸ்ரீமான் ஏ. வி. பானேஜிராவ் அவர்கள் மேற்கூறிய அபிப்பிராயத்தை ஆமோதித்தார். ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டிகாரு நமது மாஹாணத்தில் பயிரிடுவோர் அனுபவிக்கும் தற்போதிய கஷ்டதசையை விவரித்தார். நிலவரியை சட்ட பூர்வமான ஏற்பாட்டில் அமைக்க வேண்டுமென்று இடைவிடாமல் கவர்மெண்டாரைக் கேட்டுக் கொண்டதில் அவர்கள் அவ்வேண்டுகோள்களைக் கவனிக்கவில்லையென்றும், தீர்வை வசூல் சம்பந்தமாக பயிரிடுவோர்க்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின்றனவென்றும், அவைகளைப்பற்றி அவர்கள் என்ன முறையிட்டுக் கொண்டாலும் கவர்மெண்டார் கவனிப்பாரில்லையென்றும், வருமான வரியானது 1 மை அதிகப்படுத்தப்பட்டாலும் எல்லோரும் அதன் நிமித்தமாக கூக்குரலிடுகிருர்களென்றும், ஒரு நூற்றுண்டாக வாயில்லாப் பூச்சிகளைப் போலிருக்கிற பயிர் ஜனங்களின் கஷ்டங்களைப்பற்றி ஒருவித சகாயமும் ஏற்படவில்லையென்றும் கூறினர். தீர்வைக் கஷ்டமானது தற்போதில் ஜனங்களுக்குப் பணமில்லாத காலத்தில் வெகு கடூரமாகத் தாக்குகிறதென்றும் பலர் ஊரைவிட்டு ஓடியேபோக எத்தனிக்கிருர்களென்றும் கூறினர். ஸ்ரீமான்கள் ஆரோக்கியஸாமி முதலியார் அவர்களும் கோடி ரெட்டி அவர்களும் மிஸ்டர் போக்கரும் அவ்வாறே வெகு ஆவேசத்துடன் மொழிந்தார்கள். பிறகு ஸ்ரீமான் டி. எஸ். இராமசுவாமி ஐயர் அவர்கள் வாதித்தார்.



கவர்மெண்டார் தாங்கள்தான் நிலச் சொந்தக்காரர்களென்றும் அது காரணமாக அவர்கள் நில வருமானத்தில் பாதியை வரியாக எடுத்துக்கொள்வது பிசகென்றும் பண்டை காலத்தில் ஹிந்து இராஜாக்கள் நிலவரி ஒன்றை மாத்திரம் விதித்தார்களேயொழிய உப்பு வரியென்றும் வருமான வரியென்றும், தொழில் வரியென்றும் கஸ்டம்ஸ் வரியென்றும் இதர வரிகளை விதிக்கவில்லையென்றும் கூறினர். கவர்மெண்டார் புதிய ஸெட்டில்மெண்டு காலங்களில் வரிகளை உயர்த்துவதும் பிசகென்றும், புதிய ஸெட்டில்மெண்டுகளால் வியவஸாயிகளுக்கு நியாயம் ஏற்படுகிறதில்லையென்றும் கூறினர். ரெவினியூ மெம்பராகிய கனம் ஏ. ஒய். ஜீ. காம்பெல் மேற்கூறிய விவாதங்களுக்கு பதிலளிக்கையில் ஸெட்டில்மெண்டுகளின் சம்பந்தமாகவும் தீர்வை சம்பந்தமாகவும் சட்டமேற்பட வேண்டிய விஷயம் பின்வரும் கவர்மெண்டால் ஆலோசிக்கப்பட வேண்டுமென்றும் நிலவரி மாத்திரமே இருக்க வேண்டும், மற்ற வரிகள் இருக்கக்கூடாதென்றால் நிலவரியானது நிலத்தின்பேரில் விதிக்கப்படக் கூடாது நபரின்பேரில் விதிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

தீர்மானம் சபையோரால் கைக்கொள்ளப்பட்டது.

II. பாரெஸ்டு சட்டத்தின் சம்பந்தமாக விவாதம்.

ஸ்ரீமான் ஆரோக்கியஸாமி முதலியார் அவர்கள் பாரெஸ்டுகள் சரியானபடி வளர்க்கப்பட்டு ஸம்ரக்ஷிக்கப்படுகிறதில்லை யென்றும் அவைகளிலிருந்து தக்க வரும்படி வருகிறதில்லையென்றும் இதற்குக் காரணம் கவர்மெண்டார் தக்க சிரத்தையை இவ்விஷயமாய் வஹிக்கவில்லை யென்றும் கூறினர். நம்முடைய மாஹாணத்தில் பாரெஸ்டுகள் கவர்மெண்டுக்கு நல்ல ஆஸ்தியாகவிருந்த போதிலும் அவைகளிலிருந்து தக்க வரும்படி உண்டாக்கும்படியாய் கவர்மெண்டார் முயர்ச்சி செய்யவில்லையென்றும் அவர்கள் கைக்கொண்ட ஸ்கீம்களெல்லாம் பலிக்காமல் போயினவென்றும் அவர்கள் சரியான முன் யோஜனையுடன் அஸ்கீம்களை கைக்கொள்ளவில்லை யென்றும் மொழிந்தார். கவர்மெண்டார் பாரெஸ்டுகள் மாஹாணத்துக்கு உபயோகமாகும்படிக்கும் அவைகளிலிருந்து நல்ல வரும்படி ஏற்படும்படிக்கும் தக்க யோஜனைகளை அடைந்து சரியான ஸ்கீம்களை அநுஷ்டிக்க வேண்டுமென்றும் கூறினர். பாரெஸ்டு உற்பத்திகளை பல ஊர்களுக்கு அனுப்புவதற்கு கவர்மெண்டார் ரெயில்வே முதலிய சௌகரியங்களை வேண்டியபடி கைக்கொள்ள வேண்டுமென்றும் ரெயில்வே சார்ஜுகள் அவை சம்பந்தமாகக் குறைக்கப்பட வேண்டுமென்றும் கூறினர். ரெயில்வே சௌகரியங்கள் குறைவாக விருப்பதாலும் சார்ஜுகள் அதிகமாக விருப்பதாலும்தான் சென்னை பாரெஸ்டுகளில் வெகு திறமான தேக்கு முதலிய விருக்ஷங்கள் ஏராளமாக விருக்கையில் சென்னை ஜனங்கள் பர்மாவிலிருந்து மரங்களைத் தருவித்துக் கொள்கிருர்களென்றும் கூறினர். கவர்மெண்டார் இச்சீர்கேடுகளை ஒழுங்குபண்ண

வேண்டுமென்று கூறி திட்டத்தைக் குறைக்க வேண்டுமென்று பிரேரேபணையைச் செய்தார்.

ஸ்ரீமான் டி. ஏ. இராமலிங்க செட்டியார் அவர்கள் பிரேரேபணையை உறுதிப்படுத்திப் பேசுகையில் கவர்மெண்டார் பாரெஸ்டுகளை ரிகிளாசவிபை செய்வதாக வெகு நாள்களுக்கு முன்னே சொன்ன வாக்கை இன்னமும் நடவடிக்கைக்குக் கொண்டு வராமலிருப்பதின் காரணம் இன்னதென்று தெரியவில்லையென்றும் அவர்கள் அவ்வேலையை உடனே செய்து இன்னும் அதிகமான காடுகளைப் பஞ்சாயத்துகளின் நிர்வாஹத்திற்கு ஒப்புவிக்கவேண்டுமென்றும் பயிர் நிலங்களை யொட்டிய காடுகளை ரெவினியூ இலாகாவிற்கு ஒப்புவிக்க வேண்டுமென்றும் கூறினர். மேய்ச்சல் கட்டணங்களைக் குறைக்க வேண்டிய நிமித்தமாகவும் மாடுகளுக்குக் குடிக்க ஜலம் வேண்டியதற்குக் காடுகளில் குளம் முதலியவைகளை வெட்டிக் கொடுக்க வேண்டிய நிமித்தமாகவும், புல் வளர்ப்பு சம்பந்தமாகவும், பாரெஸ்டு இலாகா சிப்பந்திகளின் தொந்திரவுகளை யொழிப்பதற்காகவும் கவர்மெண்டார் உடனே விதிகளை யேற்படுத்த வேண்டுமென்றும் கூறினர்.

ஸ்ரீமான் ஏ. பி. ஷெட்டி பிரேரேபணையை ஆதரித்துப் பேசுகையில் தென் கன்னடத்தில் கிராம ஜனங்களுக்கு எருத்தழை விரகு சௌகரியங்கள் திருப்தியாக ஏற்படுகிறதில்லை யென்றும் ராயல் கமிஷனர்களின் தீர்மானத்தின்படி பாரெஸ்டு ஆபீசர்கள் கோயம்புத்தூர் வியவஸாயக் கல்லூரியில் வியவஸாயக் கல்வியையடைய வேண்டுமென்றும் மொழிந்தார்.

ஸ்ரீமான் ரங்கஸாமி ரெட்டியார் அவர்களும் மேய்ச்சல், எருத்தழை சம்பந்தமாக உள்ள குறைகளை விவரித்தார்.

ஸ்ரீமான் தேவதாஸ் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் கிராம ஜனங்கள் நீர்ப்பாசன சம்பந்தமாகவும் எருத்தழை சௌகரிய சம்பந்தமாகவும் படும் கஷ்டங்களைச் சொன்னர்.

ஸ்ரீமான் கொண்டப்பா அவர்கள் எருத்தழை சம்பந்தமாக கவர்மெண்டார் அதிகமாக கட்டணங்களை விதித்திருக்கிறார்களென்று கூறினர்.

ஸ்ரீமான் வி. எம். இராமசுவாமி முதலியார் அவர்கள் கவர்மெண்டார் காட்டு உற்பத்தி சம்பந்தமாக பொருள்க் காக்ஷிகளை பலவிடங்களில் நடத்த வேண்டுமென்றும் மேய்ச்சல் சௌகரியங்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும் எருததழை சம்பந்தமான விகிதங்களை குறைக்க வேண்டுமென்றும் கூறினர்.

ஸ்ரீமான் நாச்சியப்ப கவுண்டர் அவர்கள் சேலம் ஜில்லாவில் சில ரிஸர்வுகள் மேய்ச்சலுக்காகவே கொடுக்கப்பட வேண்டுமென்றும் அவைகளில் இலவச மேய்ச்சல் அநுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.



ஸ்ரீமான் சத்தியநாராயண சவுதிரி அவர்கள் கவர்மெண்டார் கொஞ்சகாலம் வரையிலாவது இலவச மேய்ச்சலை உத்திரவு செய்ய வேண்டுமென்று கூறினர்.

பிரேரேபணை நிறைவேறியது.

# தஞ்சாவூர் விழ்ச்சி

(ஸ்ரீமான் என். கே. அய்யர் எழுதியது.)

சுமார் முன்னூறு வருஷகாலம் தென்னாடு முழுவதும் நாயக வம்சத்து அரசர்களின் ஆட்சியிலிருந்தது. நாயகவம்சத்தவர்கள் முதலில் துங்க பத்திரா நதிக்கரையில் இருந்த வித்யா நகர (விஜய நகரம் என்றும் சொல்லப் படுவதுண்டு) த்தில் தமது ராஜதானியை ஸ்தாபித்து, பின்னர் நாளடைவில் சுற்றுப்புறங்களிலிருந்த நாடுகள் அனைத்தையும் வென்று கீழ்ப்படுத்தி, தம் ராஜ்யத்தை மிகவும் விஸ்தாரமாகச் செய்து கொண்டார்கள். ஓர் சமயத்தில் அவர்கள் ஆண்டு வந்த ராஜ்யத்தின் எல்லை மேற்கே 'கோவா' வரைக்கும், வடக்கே நாகபுரி வரைக்கும், கிழக்கில் பூரி அல்லது ஜகன்னாதம் என்னும் க்ஷேத்திரம் வரைக்கும், தெற்கில் கன்னியா குமாரி முனைவரைக்கும் பரவியிருந்தது. இந்தியாவில் மகம்மதியர்களை எதிர்த்து நின்ற ஹிந்து ராஜ்யங்கள் எல்லாவற்றிலும், விஜயநகரமே பிரதானமானது. நாயக வம்சத்து மன்னர்கள் சுமார் முன்னூறு வருஷங்கள் வரை மகம்மதியர்களைத் தெற்கே வர விடாமல் வெற்றியுடன் தடுத்து வந்தார்கள். கடைசியில் அவர்கள் பலமும் அநேக காரணங்களால் குறைந்து போயிற்று. தலைமை ஆட்சியின் சக்தி உடைந்து போனபின்னும், அவர்கள் பிரதிநிதிகளாக ஆங்காங்கு ஆண்டுவந்த சிற்றரசர்கள் வெகுகாலம் வரைக்கும் சுதந்திரத்துடன் அரசு செலுத்தி வந்தார்கள். நாம் இப்பொது விவரிக்கப்போகும் சம்பவம் மேலே கூறிய சிற்றரசர்கள் தம் தம் ராஜ்யங்களில் சுதந்திரமாக ஆண்டு வந்த காலத்தில் நடந்ததாகும்.

மதுரையில் சொக்கநாத நாயகர் என்றொரு பிரசித்தி பெற்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் யுத்தத்தில் மிகவும் பராக்கிரமமாயிருந்தது மன்றி, ராஜ்யத்தையாளுந்திறமையிலும் அதிவல்லவராயிருந்தார். அவர் சிம்மாசனமேறியது கி பி 1670ம் வருஷம்.

அக்காலத்தில் தஞ்சாவூர் ராஜ்யத்தை விஜய ராகவ நாயகர் என்ற பெயர் பூண்ட மற்றொரு நாயக அரசர் ஆண்டு வந்தார். விஜயராகவ நாயகருக்கு ஓர் அதிரூபவதியான மகளுண்டு. அம்மகளைத் தம் குலத்திற்கேற்றவாறு கணவனைத் தேடிக் கொடுக்க ஆலோசித்துக் கொண்டிருந்தார். இவ்வாறிருக்கையில், மதுரைக்கரசனான சொக்கநாதநாயகர் அக்கன்னிகையின் அழகைக்

கேள்வியுற்று அவளைத்தானே மணந்து கொள்ள எண்ணினர். அவ்வெண்ணத்தை முடிக்கும் நிமித்தம் அவர் விஜயராகவ நாயகருக்கு ஓர் தூதரையனுப்பி வேண்டினர். ஆனால் விஜயராகவ நாயகர் அதற்கிணங்கவில்லை. அதன் காரணம் என்னவென்றால் மதுரைக்கதிபதியான சொக்கநாத நாயகர் தனக்குச் சமமான உயர்ந்த குலத்தவரில்லை யென்று அவர் கருதியதேயாகும். அவர் கூறியபதிலில், சொக்கநாத நாயகரது குலம் இழிவான தென்றும், விஜயநகரத்து சக்ரவர்த்தி ராமராஜாவின் தயவினாலேயே அவரது முன்னோர்கள் மேன்மை யடைந்தார்களென்றும், அவ்வாறு உலகப்பதவியில் மேன்மை யடைந்ததனால் மாத்திரமே அவர்கள் குலம் உயர்ந்து விடவில்லை யென்றும், அவர் தன் மகளை மணக்கவேண்டு மென்று விரும்பத் துணிந்ததே, தனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிற தென்றும் விவரித்துக் காட்டினர். இவ்விடையைக் கேட்டதும், சொக்கநாதருக் குண்டான கோபத்திற்கு அளவேயில்லை. ஜாதி இறுமாப்புக் கொண்டு, தன் குலத்தை இழிவான தென்று சொல்லிப் பழித்த விஜயராகவ நாயகருக்கு ஓர் பாடம் கற்பிப்பது மின்றி, தன் படைபலத்தால் தஞ்சாவூரை வென்று, அதன் அரசனையும் தன் கீழடக்கி, அக்கன்னிகையை மணந்து வருவதாக விரதம் பூண்டு, பெருத்த படைகளைத் திரட்டிக் கொண்டு, தஞ்சாவூரை நோக்கி அவர் புறபட்டார்,

சத்துரு தன் ராஜ்யத்தின் மீது படையெடுத்து வரும் செய்தியைக் கேட்டதும், விஜயராகவ நாயகர், அவனை யெதிர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்யத் தொடங்கினர். அவரும் தன் படைகளனைத்தையும் திரட்டி, சேனாபதியின் வசம் ஒப்புவித்து, சத்துருவை வழியிலேயே மறித்துப் போர்புரிந்து துரத்தும்படிக் கட்டளை யிட்டனுப்பினர். அவர் அனுப்பிவைத்த படைகள் சத்துருவை எதிர்த்துத் தோற்கடிக்கப் போதுமானவையா யிருந்த போதிலும், அவர் அதிருஷ்டம் இச்சமயத்தில் நன்றாயிருக்க வில்லை. ஏனென்றால், அவருடைய சேனாதிபதி, சத்துருவைச் சந்தித்தவுடனே, அவனை யெதிர்க்காமல் காலதாமதஞ் செய்து, கடைசியில் அவன் அளித்த பஞ்சப் பொருளுக் காசைப்பட்டு, தன் எஜமானனுக்குத் துரோகியாகி, முழுச்சைனியங்களுடன் சத்துருவிடம் கலந்து கொண்டான். இவ்வாறு சொக்கநாத நாயகர் லஞ்சத்தாலும், மேல் ஆசை வார்த்தைகளாலும், தன் எதிரியின் சைன்னியங்கள் முழுவதையும் கைவசப் படுத்திக்கொண்டு, இனி எளிதில் தஞ்சாவூரை வென்று விடலா மென்று எண்ணி, மிக்க விரைவாக நடந்து வந்தார்.

இங்கு தஞ்சாவூரில் விஜயராகவ நாயகர், தன் சேனாதிபதி செய்த சதியைக் கேட்டு மிகவும் மனம் வாடினர். திடீரென்று வேறொரு படையைத் திரட்டவும் அவருக்குப் போதுமான அவகாசமில்லை. ஆயினும் அவர் சத்துருவுக்குச் சிறிதும் இடங் கொடுப்பதில்லையென்று தன் மனத்துள் தீர்மா



னித்து, தன் நகரின் கோட்டைக் கதவுகளை மூடிவிட்டு, வெகு நாள் முற்றுகையாயினும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முயன்றார். ஆனால் அவருக்கு அந்நகரத்து ஜனங்களிடம் போதுமான உதவி கிடைக்கவில்லை. ஏனென்றால், அவர் உத்தியோகஸ்தர்களும், நகரத்து ஜனங்களும் அவர்மீது ஓர் விஷயத்தில் மிகவும் வெறுப்புற்றிருந்தார்கள். ராஜா விஜயராக நாயகர், தன் ராஜ்யத்திலுள்ள அழகிய பெண்களை யபகரித்துத் தன் அந்தப்புரத்தில் வைத்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. இவ்வாறு அவர் அந்தப்புரத்தில் ஆயிரக்கணக்கான பெண்களிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இக்காரணத்தாலேயே அவருக்கு ஆபத்து நேர்ந்தபோது, பிரஜைகள் உதவி செய்யப் போதுமானவளவு முன்வரவில்லை. அவர் சேனாதிபதி அவரைவிட்டுப் போனதற்கும் இதுவே காரணமா யிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது.

இப்போது ராஜா விஜயராகவ நாயகருக்குத் தன் நகரத்தைக் காப்பதும் அசாத்தியமாகத் தோன்றியது. ஆனால், என்ன நேர்ந்தாலும் அவர் சத்துருவுக்குக் கீழ்ப்படிவதில்லை யென்று உறுதி செய்துகொண்டார். அவரிடமிருந்த ஏராளமான திரவியமும் சத்துருவின் கையில் அகப்படுவது அவருக்கிஷ்டமில்லை. இக்காரணம் பற்றி, அவர் தன்னிடமிருந்த விலையுயர்ந்த ரத்னங்களை யெல்லாம் திரட்டி, பீரங்கியில் வைத்துச் சிதறடித்து விட்டார். அவருக்குத் தான் ராஜ்யத்தையும் முடியையும் இழப்பதுமின்றி, தன் உயிரையும் இழந்துவிடுவது நிச்சயமாகத் தோன்றியது. அதற்கு முன்னதாகவே தன் மானத்தையும், கவுரவத்தையும் இழந்துவிடாமல் காப்பாற்ற வேண்டிய முயற்சிகளைத் தேடினர். முதலில் அவர் வைப்பாட்டிகளாக அந்தப்புரத்தில் வைத்திருந்த ஆயிரக்கணக்கான ஸ்த்ரீகளை விடுவித்து, அவரவர் இல்லங்களுக்குப் போகும்படி யனுப்பினர். அதன்பின், அவர் விவாகஞ் செய்திருந்த மனைவிகளையும், பெண் மக்களையும், நெருங்கிய உறவினர்களது பெண்டுகளையும் ஓர் வீட்டில் திரட்டி, அவர்கள் சத்துருவின் கையிலகப்பட்டு அவமானப்படாத வண்ணம் தானே அவர்களை யழித்துவிட வெண்ணி, அவ் வீட்டினடியில் வெடி மருந்தைக் குவித்து எரித்து, அதை அவர்களுடன் தகர்த்து விட்டார். ஆனால் இச்சமயத்தில், அவர் மிகுந்த பிரேமையுடன் நடத்திவந்த பிரதம பத்தினியை மாத்திரம் தன்னுடன் அழைத்துக்கொண்டு தாமிருவரும் ஒரே சமயத்தில யுத்தத்தினிடையே மடிவதாக வாக்களித்துப் புறப்பட்டார்.

ராஜா விஜயராகவ நாயகருடன் அவர் நெருங்கிய உறவினர்களாகிய பதினெட்டு பேர்கள் குதிரை மீதேறி, யுத்தத்தினிடையில் சென்று உயிர்துறக்கத் தீர்மானித்துப் புறப்பட்டார்கள். அவர் பிரதம பத்தினி தன்னை அப்போதே கொன்றுவிடும்படிப் பல தடவைகள் வேண்டியும் அவர் [illegible]ணியாமல் மறுத்துவிட்டார். அம்மாதைத் தன் குதி[illegible]த்தி

லமர்த்திக்கொண்டு, அவரும் தன்னுறவினர்களுடன் கோட்டைக் கதவுகளைத் திறந்து, சத்துருக்களை நோக்கி வெளியே புறப்பட்டார். போகும் வழியில் அம்மாது தன்னை அவர் கையாலேயே கொன்றுவிட்டுப் பின் யுத்தத்திற்குச் செல்லும்படி மறுபடியும் மன்றாடினாள். ஒருகால் யுத்தத்தினிடையில் அவர் முன் மரணமடைந்துவிட்டால், பின்னர் அம்மாதின் கதி என்னவாகும்? இதை யெண்ணி, ராஜா விஜயராகவ நாயகர் கடைசியில் தன் கையாலேயே தன் பிரதம பத்தினியை உயிர்வாங்கத் துணிந்தார். அதன் பின், ஐம்பத்தொன்பது வீரர்களும் மரணத்தை முன்னிட்டு, யுத்தகளத்தை நோக்கி விரைந்து சென்றார்கள்.

சத்துருவைத் தம்மால் ஜெயிக்கமுடியாதென்பது நிச்சயமானால், வடநாட்டு ராஜபுத்திரர்கள் இம்மாதிரியே தம் பத்னிகளை முதலில் கத்திக் கிரையாக்கிவிட்டு, யுத்தகளத்தின் நடுவில் நுழைந்து, தம்முயிருள்ளவரைக்கும் சத்துருக்களை பாய்த்துவிட்டுக் கடைசியில் தம்முயிரைக் கொடுப்பது வழக்கம். இவ்வழக்கம் அநேக சந்தர்ப்பங்களில் தென்னாட்டு ராஜபுத்திரர்களென்று சொல்லப்படும் நாயகர்களால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. சண்டையினிடையில் ராஜா விஜயராகவ நாயகரும் அவரது உறவினர்களும் உயிர் துறந்தார்களென்பதைச் சொல்லாமலே அறிந்துகொள்ளலாம். அதன் பிறகு, தஞ்சாவூர் ராஜ்யமும் மதுராதிபதி சொக்கநாத நாயகரின் ஆட்சிக்குள் வந்தது. ஆனால் அவர் நினைத்தபடி மணந்துகொள்ள கன்னிகை மாத்திரம் அவருக்குக் கிடைக்கவில்லை

மேலே விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவம் இட்டாலி தேசத்தைச் சேர்ந்த வெனிஸ் நகரவாசியான நிக்கோலாய் மானுக்கி என்பவர், இந்தியாவில் வெகு காலம் வசித்து வந்தபோது கண்ட விஷயங்களைக் குறிப்பிட்டெழுதி யிருக்கும் சரிதத்தினிடையே காணப்படுகின்றது. (சு. மி.)

# வர்த்தமான குறிப்பு.

சியம் தேசத்தின் பிரதான நகரமாகிய பாங்காக்கில் பாம்புகடி வைத்திய சாலை ஒன்று இருக்கிறது. அவ்வைத்தியசாலையின் தோட்டத்தில் எல்லா வித ஸர்ப்பங்களும் விஷப்பாம்புகளும் வளர்க்கப்படுகின்றன. அவைகளில் எதொன்றும் மனிதரையாவது மிருகங்களையாவது கடித்தால் கடிபட்டவர்கள் உடனே இறந்துபோவார்களாம். இந்த வைத்தியசாலையை எல்லோரும் போய் பார்க்கக்கூடுமாம். பாம்புகளுக்கு வளைகள் தக்கபடி அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். பாம்பு கடியால் மிருக மரணங்கள் சியத்தில் அதிகமாதலால் பாம்பு கடிபட்ட மிருகங்களின் சிகிச்சைக்காக லாயங்கள் தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல தேச ஜனங்கள் மேற்கூறிய பாம்பு பாரத்தை (Farm) வந்து பார்க்கிறார்களாம். ஒவ்வொரு மாதத்திலும்



முதல் வியாழக்கிழமை பாம்புகளிலிருந்து விஷம் எடுக்கப்படுகிறது. அன்றையதினம் காலை பத்து மணிக்கு வைத்தியசாலை டாக்டர் ஒரு கூலிக்காரனை அழைத்துக்கொண்டு முதல் வளையின் அருகில் நிற்பார். உடனே ஒருவன் கையில் ஒரு நீண்ட தார் குச்சியோடு அங்கே வருகிறான். அவன் வந்தவுடனே பாம்பு வளைக்கதவுகளைத் திறக்கிறான். கதவுகளைத் திறந்தபின் ஒரு மேஜையையும் ஒரு சிறு பெட்டியையும் கையில் கொண்டுபோய் அடியிலுள்ள காரைக் கட்டிடத்தில் வைக்கிறான். பெட்டியைத் திறந்து கிளாஸ் துண்டுகளை எடுத்து மேஜையின் மேல் வைக்கிறான். பிறகு வைத்தியசாலைத் தலைவர் மேற்கூறிய மனிதனோடு வெகு ஜாக்கிரதையாய் பாம்பு வளைக்குச் செல்கிறார். பாம்பு பாரம் (Farm) வேலைக்காரனாகிய மேற்கூறிய மனிதன் தன் கையிலுள்ள கோலால் பாம்புக் கூட்டைப் புரட்டுகிறான். புரட்டினபின் ஸர்ப்பம் ஆவேசத்துடன் கிளம்பும்பொழுது அதன் படத்தின்மேல் தார்க்குச்சியால் குத்தியிருத்திப் பின்பு ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு போய் டாக்டரிடம் சென்று பாம்பின் வாயைத் திறக்கிறான். டாக்டர் கிளாஸ் துண்டை ஸர்ப்பத்தின் வாயில் வைப்பார். உடனே கிளாஸ் துண்டின்மேல் பாம்பு வாயிலிருந்து எண்ணை போன்ற விஷம் விழுகிறது. வேண்டிய மட்டில் விஷம் கிளாஸ் துண்டின்மேல் சேர்ந்துவிட்ட பின்பு பாம்பை ஜலத்தில் விட்டுவிடுவார்கள். இவ்விதமாக சுமார் 1000 ஸர்ப்பங்கள் நடத்தப்படுகின்றன. மேற்கூறிய விஷத்தை யெடுத்து பாம்புகடி சீரமானது சியம் கவர்மெண்டாரால் தயாரிக்கப்பட்டு சியம் தேசத்தில் பிரதி கிராமத்திலும் பாம்பு கடிபட்ட மனிதர்களுக்கும் ஆடு மாடுகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது. பாம்பு கடிபட்ட மனிதர்களுக்கும் மாடுகளுக்கும் இது உயிரைக் கொடுக்கின்றது. நம்முடைய தேசத்திலிருந்து ஸீக்கியர்களும், மலேயா தேசத்து ஜனங்களும், சீனர்களும், சீரத்தை யடையவேண்டிய நிமித்தம் பாங்காக்கிற்கு வருகிறார்களாம். நம்முடைய தேசத்தில் பாம்புக்கடி மரணத்தினால் பல கிராமங்களில் மாடுகள் குறைந்துவருகின்றன. நமது கவர்மெண்டாரும் மேற்கூறிய சீரத்தை வரவழைத்து வெடிரினரி வைத்தியசாலைகளில் அதை யுபயோகிக்கும்படிச் செய்யவேண்டுமென்று கோருகிறோம்.

x x x x x

எகிப்து தேசத்தில் கிஜாப் பிரதேசத்தில் பிரமிடுகளின் அருகில் 5200 வருஷங்களுக்கு முன் புதைக்கப்பட்டப் பிரேதத்தின் கல்லறையில் ஒரு அலபாஸ்தர் தலை அகப்பட்டதாம். கல்லறைக்குள் ஒரு மூலையில் 4 ஜாடிகள் இருந்தனவாம். தவிர 78 சின்னச் சின்ன ஜாடிகளும், மாட்டின் வலது முன் பாதமும், ஒரு பலிபீடமும் சிகப்புச் சட்டிகளும் இருந்தனவாம். சவப்பெட்டித் திறந்து பார்க்கப்பட்டதில் ஒரு ஸ்திரீயின் சரீரம் காணப்பட்டதாம். அநேக பொன் நகைகளால் அது பூஷிக்கப்பட்டிருந்ததாம்.

x x x x x

தமிழ் வருஷப் பிறப்பன்று தான் பர்மியர்களுக்கும் வருஷப் பிறப்பு. வருஷம் பிறக்கும்பொழுது தேவராஜன் பூமிக்கு வருகிறானாம். அவர் பூமிக்கு வருகையில் இரக்கைகளையுடைய விருஷபத்தின்மேல் ஏறிக் கொண்டும் சந்தத்தை பாலையாகப் போட்டுக்கொண்டும் கு... ...ப் பிடித்துக்கொண்டு வருகிறானாம். பயிருக்கு வேண்டிய ஜலத்தை அவர் உண்டுபண்ணுகிறாராம். வருஷப் பிறப்பு தினத்தில் முதல் முதலில் பர்மியர்கள் தங்களுடைய தேச க்ஷேமத்தை பற்றியும் குடும்ப க்ஷேமத்தைப் பற்றியும் பயிர் க்ஷேமத்தைப்பற்றியும் பிரார்த்தனைகளைச் செய்கிறார்கள். பிறகு பண்டிகையைக் கொண்டாடுகையில் ஒவ்வொருவரும் மற்றவர்களின் மீது ஜலத்தைக் கொட்டி விளையாடுகிறார்கள். தெருக்களில் போகிறவர்கள் மீதும் ஆண் பெண் பேதமில்லாமல் இவ்விதமாக ஜலத்தைக் கொட்டுகிறார்கள்.

x x x x x x

சீனர்கள் நம்முடைய தேசத்தவர்களைப் போல் சாமான்களை தலைமேல் தூக்கிக் கொண்டு தெருவில் விற்கிறதில்லை. அவர்கள் தோளில் காவடி போட்டுக் கொண்டு இருபக்கத்திலும் சாமான்களை வைத்துக்கொண்டு விற்கிறார்கள். பலஹாரங்களை விற்கிறவர்கள் ஒரு பக்கத்தில் மாவு பச்சைமிளகாய் இஞ்சி, வெங்காயம் இவைகளோடு, எரியும் கரியடுப்பையும் சுமந்து கொண்டு வேண்டுமென்பவர்களுக்கு அங்கங்கேயே செய்து கொடுத்துக் கொண்டு போகிறார்கள். ஐஸ்கிரீம் விற்பவர்களும் ஐஸையும் இயந்திரத்தையும் மற்ற சாமான்களையும் இது மாதிரியே தூக்கிக்கொண்டு போய் வேண்டியவர்களுக்கு அங்கங்கே செய்து கொடுக்கிறார்கள்.

x x x x x x

இரங்கூனுக்கு அடுத்த டாம்வேயில் ஒரு புத்த சிலை ஒரு தென்னமர உயரமிருக்கிறது.

x x x x x x

பௌத்த பிக்ஷுக்கள் பிக்ஷையை வாங்க வருகையில் ஒருவர் பின் ஒருவராக மௌனம் சாதித்துக் கொண்டு தான் பிக்ஷையை வாங்குகிறார்கள். நம்முடைய தேசத்தில் போல் அவர்கள் பாட்டுகூச்சல் முதலியவைகளுடன் பிக்ஷையெடுக்கிறதில்லை; ஒருவர் மேல் ஒருவர் விழுந்து கொண்டும் பிக்ஷையெடுக்கிறதில்லை.

x x x x x x

இரங்கூனிற் கடுத்த சம்பேயில் ஸ்ரீமான் சி. எஸ். ஏகாம்பர ஐயர் அவர்களின் பங்களாவிற்கு எதிரில் இராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களின் செட்டி நாடு காலேஜ் இருக்கிறது. இதில் சுமார் 200, 300 செட்டிப் பிள்ளைகள் கல்வியை அடைகிறார்கள். மாணவர்கள் பள்ளிக்கூடத்திலேயே வஸிக்கிறார்கள். பள்ளிக்கூடம் ஒரு சேர்த்தியான ஏரியின் கரையில்



அமைக்கப்பட்டிருக்கிறது. கம்பையில் சுப்பிரமண்ணிய சுவாமி கோவிலும், நகரத்தார் சத்திரமும் ஸ்ரீ வேங்கடேச பெருமாள் கோயிலும் வெகு சிறப்பாக நடத்தப்படுகின்றன. இரங்கூனிலும் சுப்பிரமண்ணிய சுவாமி கோயிலும், ஆஞ்சநேய சுவாமி கோயிலும் துர்க்காமாரி என்ற காளி கோயிலும், ஸ்ரீ விசுவநாத சுவாமி கோயிலும் நன்றாக நடக்கின்றன. இராஜா டாக்டர் ரெட்டியார் எல். எல். டி அவர்களும் ஸ்ரீமான் நாகலிங்கத்தேவரும், பல பங்காளிப் பிரமுகர்களும் ஹிந்து தேவாலயங்களை யாதரித்து வருகிறார்கள். கோயில்களெல்லாம் வெகு சேர்த்தியாகவும் ஸலவைக் கற்கள் முதலிய உயர்ந்த கற்களினால் கட்டப்பட்டும் வெகு சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சில கோயில்களில் ஸ்ரீ புத்தருடைய சன்னதியுமிருக்கிறது. பர்மாதேசம் முழுவதுமே ஹிந்துக்கோயில்களிருக்கின்றன. பிரதி கிராமத்திலும் நாட்டுக் கோட்டை செட்டிகளும் ஓரியாக்காரர்களும், கோரங்கிகளும், தமிழ் நாட்டினர்களும் வட இந்தியர்களும் இருக்கிறார்கள்.

x x x x x x

ரங்கூனில் ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷனார் சிறந்த ஊழியங்களைச் செய்கிறார்கள். ஈடன் தெருவிற்கருகில் அவர்களது தர்ம வைத்திய சாலையானது வெகு நன்றாக நடைபெறுகிறது. பல ஐரோப்பிய டாக்டர்களும் இந்திய டாக்டர்களும் இலவசமாக உழைத்து 1000-க் கணக்கான ஜனங்களுக்கு வைத்தியஞ் செய்கிறார்கள்.

x x x x x x

இரங்கூனில் டல்ஹவ்ஸீ தெருவில் ஸ்ரீராம கிருஷ்ண மிஷனார் ஒரு பெரிய கிரந்த சாலையையும் பத்திரிகை வாசகசாலையையும் அமைத்திருக்கிறார்கள். இப்பத்திரிகை வாசகசாலையில் உலகத்திய பத்திரிகைகளெல்லாம் வருகின்றன. தினந்தோறும் சுமார் 300 பெயர்கள் வாசகசாலைக்கு வந்து பத்திரிகைகளை வாசிக்கிறார்கள். வருகிற பத்திரிகைகளுள் நமது நூல் இந்தியப் பத்திரிகை ஒன்று. அதை அநேகர் வெகு ஆவலுடன் படிக்கிறார்களென்று நமது கிருபர் கூறுகிறார். கிராமாபிவிருத்தி விஷயங்களில் உலகம் முழுமையுமே ருசியை வஹிக்கிறது போல் காணப்படுகிறது. ரங்கூனில் பிகாண்டேத் தெருவில் ஸ்ரீராம கிருஷ்ண மிஷனார் சில நாளைக்கு முன்பு ஸ்ரீ சங்கரஜயந்தியைக் கொண்டாடினார்கள். கொண்டாட்ட தினத்தன்று ஒரு மீடிங்கு நடைபெற்ற பொழுது பௌத்தப் பொங்கி யொருவர் ஸ்ரீ சங்கரரின் அவதாரத்தைப் பற்றியும் அவர் உலகத்திற்குச் செய்திருக்கிற ஊழியங்களைப் பற்றியும் ஆங்கிலத்தில் ஓர் சிறந்த உபந்யாஸத்தைச் செய்தார்.

x x x x x

ரங்கூனில் மணிப்பூர் பிராம்மணர்கள் என்று ஒரு ஜாதியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய தென் இந்தியப் பிராம்மணர்களைப் போலவே

பஞ்சகச்சங்கட்டிக் கொண்டும், பூஜை, ஆசாரங்கள், ஆகாராதிகள் இவைகளை வஹித்துக்கொண்டுமிருக்கிறார்கள். ஆனால் தலையில் மாத்திரம் பர்மியர்களைப் போல் ஒரு சின்ன வஸ்திரத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மதத்தில் புத்தர்கள்தான், புத்த கோயில்களுக்குப்போய் தொழுகிறார்கள். ஆனால் ஹிந்து பிராம்மண ஆசாரங்களையும் பூஜைகளையும் செய்கிறார்கள்.

x x x x x

பெண்கல்வியும் ஸ்திரீகளின் இயக்கமும் பர்மாவில் ஓங்கி வருகின்றன. இவைகள் சம்பந்தமாக பல தென்னிந்திய ஸ்திரீகளும், பெங்காலி, குஜராத்தி பார்சி ஸ்திரீகளும் உழைத்து வருகிறார்கள். இவர்களுழைப்பினால் பல ஸ்தாபனங்கள் அபிவிருத்தியை யடைந்திருக்கின்றன. நமது நகரில் ஸேவாஸதனமும், ஒய். ட்ப்ளியூ. ஐ. ஏ இருப்பது போலவே ரங்கூனிலும் ஸேவாஸதனமும், ஸ்திரீகள் சங்கமும் கிளப்பும் வெகு க்ஷேமத்தியாக நடைபெறுகின்றன. ஸ்திரீகளின் இயக்கம் ஓங்குவதற்குக் காரணம் மிஸ்ஸஸ் எஸ். பி. எஸ். ஐயர் அவர்களின் ஊழியமே. லேடி இன்னிஸ் அவர்களும் இவ்வம்மையாருடைய ஊழியங்களைப் புகழ்ந்திருக்கிறார்களாம். சில வாரங்களுக்கு முன் சுதேசமித்திரனின் வாரப்பதிப்பொன்றில் ரங்கூன் ஸ்திரீகளின் சங்கத்தின் படமொன்று காணப்படும். அதில் மேற்கூறிய மிஸ்ஸஸ் எஸ். பி. எஸ். ஐயர் அவர்கள் மத்தியில் உட்கார்ந்திருக்கிறார்கள்.

x x x x x x

அமெரிக்கா நியூயார்க் நகரத்தில் ஐம்பது அறுபது அடுக்கு மாளிகைகள் உள்ள மாளிகைகள் அநேகம் இருக்கின்றன. இப்பொழுது அங்கே 105 அடுக்கு மாடிகள் உள்ள ஓர் அற்புத மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. உலகத்திலேயே தற்காலத்திலுள்ள எல்லாக் கட்டிடங்களிலும் இம்மாளிகை மிகவும் பெரியது. இம்மாளிகை ஒரு அழகான நகரத்தைப் போலவே யிருக்கிறது. அதில் சுமார் 40000 ஜனங்கள் வசிக்கிறார்கள். அதனை ஒரு அழகான நகரமென்றே சொல்லலாம். இம்மாளிகை 1050 அடி உயரம் உள்ளது. இதைக்கட்டச் செலவழிந்த தொகை 15 கோடி ரூபாயாகும். இம்மாளிகை உச்சியிலிருந்து பார்க்கும் அயல் தேசத்துப் பிரயாணிகள் நியூயார்க் நகர அமைப்பையும் ஜன நெருக்கத்தையும் அகன்ற வீதிகளையும் அழகான கடைத்தெருக்களையும் பார்க்கலாம்.

x x x x x

கவிராயர்கள் வானை இடிக்கும் கோபுரங்களும், மதி தவழும் மண்டபங்களும் முன் காலத்தில் இருந்ததாகக் கூறுகின்றார்கள். ஆனால் நாம் தற்காலத்தில் அவை போன்ற மாளிகைகள் பிற தேசங்களில் பல இருக்கின்றன என்று பத்திரிகை வாயிலாக அறிகிறோம்.


## ஆரோக்கியப் படத்திரட்டு.

தொகுதி 2, 1930.

சரீராரோக்கிய சம்பந்தமான விசித்திரப்படங்கள் பல இதில் அடங்கியுள்ளன. காற்று, ஜலம், ஆகாரம், குழந்தைப் பருவம், தாய்ப்பருவம், தூசு, வியாதி, பிரதம சிகிச்சை, சரீரப் பயிற்சி, ரோக சிகிச்சை, முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் திருஷ்டி பூர்வமாகவே ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும், மாணவன் மாணவியும் கண்டறிந்து, நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அடைந்து ஆனந்தப்படக்கூடியது. எவனொருவன் திடகாத்திர சரீரத்துடன் ஆரோக்கியமும் தீர்க்காயுளும் அடைய விரும்புவானோ, அவனுக்கு கிளர்ச்சியையும், உற்சாகத்தையும், உபதேசத்தையும் தரக்கூடியது.

ஆரோக்கிய தீபிகையின் சந்தாதாரர்களுக்கு அணா 12, முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

உடனே அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

மனேஜர், "ஆரோக்கிய தீபிகை"

323, தம்பு செட்டித் தெரு, சென்னை.


TO LET.

# ரூரல் இந்தியா பஞ்சாங்கம்.

பிரஜோற்பத்திஞு வைகாசிமீ

இங்கிலீஷ் 1931ஞு மேமீ — ஜூன்மீ.

| வைகாசி | மேமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | விஷ்ணுபதிபுண்யகாலம் |
| 1 | 14 | வியா | து28-10 | ரே58-23 | சி58-23அ | ரிஷபரவி நா-31-23-வி, |
| 2 | 15 | வெ | திர32-38 | அஸ்60 | அமி60 | மாச சிவராத்திரி |
| 3 | 16 | சனி | சது35-53 | அஸ்3-48 | சித்60 | மூலிகை உபயோகிக்க |
| 4 | 17 | ஞா | அ ● 37-58 | பர * 7-53 | சித்60 | அமாவாசை, கிருத்திகை |
| 5 | 18 | திங் | பிர38-23 | கிரு10-48 | ம10-48அ | ஜேஷ்ட சுத்தம் |
| 6 | 19 | செவ் | துதி37-43 | ரோ12-18 | அ12-18சி | சந்திர தரிசனம் |
| 7 | 20 | புத | திரி35-58 | மிரு12-45 | சித்60 | கரிநாள், ரம்பா திரிதிகை |
| 8 | 21 | வியா | சது33-15 | திரு12-18 | ம12-18அ | மாசசதுர்த்தி விரதம் |
| 9 | 22 | வெ | பஞ்29-45 | புன10-53 | சி10-53மர | மிதுனாயனம் நா-1-50-வி |
| 10 | 23 | சனி | சஷ்25-40 | பூச8-50 | சி8-50மர | சஷ்டி, ஆரண்யகௌரி விர |
| 11 | 24 | ஞா | சப்20-58 | ஆயி6-13 | சி6-13மர | ஆயுதம் வாங்க [தம் |
| 12 | 25 | திங் | அஷ்15-48 | மகம்3-3 | மர3 3சித் | அவமாகம், சித்திரம் எழுத, |
| | | | | பூரம்59-30 | | மாடுவாங்க [தார |
| 13 | 26 | செவ் | நவ10-13 | உத்55-35 | அ55-35சி | தசஹாரவிரதம், கங்காவ |
| 14 | 27 | புத | தச4-15 | அஸ்51-28 | மர51-28சி | ஸ்மார்த்த ஏகாதசி, அவ |
| | | | ஏகா58-10 | | | மாகம் [தரி முடிவு |
| 15 | 28 | வியா | து52-3 | சித்47-20 | சி47-20அ | வைஷ்ணவ ஏகாதசி, கத் |
| 16 | 29 | வெ | திர46-8 | சுவா43-18 | சித்60 | கரிநாள், சுபமுகூர்த்தம் |
| 17 | 30 | சனி | சது40-38 | விசா39-45 | சித்60 | கரிநாள், நரசிம்ம ஜயந்தி |
| 18 | 31 | ஞா | ○35-45 | அனு36-58 | மர60 | பௌர்ணமி |
| 19 | 1931ஞு ஜூன்மீ 1 | திங் | பிர32-13 | கே35-10 | சித்60 | |
| 20 | 2 | செவ் | துதி29-48 | மூல34 43 | அ34 43சி | |
| 21 | 3 | புதன் | திரி29-0 | பூரா35-53 | அமி60 | |
| 22 | 4 | வியா | சது29-50 | உத்38-38 | சித்60 | |
| 23 | 5 | வெ | பஞ்32-30 | திரு43-10 | மர43-10சி | |
| 24 | 6 | சனி | சஷ்36-45 | அவி49-5 | சித்49-5அ | |
| 25 | 7 | ஞா | சப்42-10 | சத56-13 | சித்60 | |
| 26 | 8 | திங் | அஷ்48-15 | பூரட்60 | மர60 | |
| 27 | 9 | செவ் | நவ54-35 | பூரட்3-50 | மர3-50அ | |
| 28 | 10 | புத | தச60 | உத்11-23 | சி11-23மர | |
| 29 | 11 | வியா | தச0-48 | ரே18-13 | சி18-13அ | |
| 30 | 12 | வெ | ஏகா4-35 | அஸ்23-48 | அ23-48சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 31 | 13 | சனி | துவா7-38 | பர27-53 | சி27-53அ | யமுனா புஷ்கரம், கடன் தீர் |
| 32 | 14 | ஞா | திர8-55 | கி*30-20 | சி[illegible]60 | கிருத்திகை. [க்க |

| ராகு சுக் | புத | சூரி | குரு |
|---|---|---|---|
| | 2-மேஷ-சுக<br>14-சிம்ம-செ<br>15-தனு-சனி | | செவ் |
| சனி | 24-ரிஷ-புத<br>26-ரிஷ-சுக்<br>31-கட-குரு | | |
| | | | கே |

# SADHANA
## AUSADHALAYA
### DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும் வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப்படும் வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப்படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்).

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம் வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ல ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்ப்பப்பை வியாதி, அகாலமாதவிடாய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2. 50 டோஸ் ரூ 5

Regd. No. M. 2475. MAY 1931. Vol. VI—No. 5


# அம்ருதாஞ்சனம்.

என்று மென்ன?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்.

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், மூலசங்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம் — சைத்யம்

சளுப்பு — மார்சளி

உப்பிசம் — மார் மூச்சு

கழுத்து வலி — ரத்தம் விழுதல்

சந்து வாய்வு — சீழ் விழுதல்




சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்

நோய், செகப்பு, தத்துக்கள், படை

சிறங்கு, தெணவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன்

எல்லா நோய்களையும்

பாதைகளையும்

போக்கும் ! போக்கும் ! ! போக்கும் ! ! !

மூன்று விசைகளில் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் — மதராஸ்


Published by Mr. *A. Rajagopal Reddi*, President, Forest Panchayatdars' Union Ltd, Madras. *Printed AT THE MAGAZINE PRESS LIMITED, CHINGLEPUT.*